# அரசறிவியல்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## தேர்ச்சி மட்டம்: 5.8

### பெண்ணியவாதம்

- அரசு தொடர்பான பெண்ணியவாதம் கோட்பாடுகிடையாது. எனினும் பால்நிலையினை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடாகும். அண்மையில் அறிமுகமான புதிய கோட்பாடாக பெண்ணியவாதம் விளங்குகின்றது. அரசியல் மற்றும் சமூக ஆய்வுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய பெண்ணியவாதம் கற்கைநெறி 1970 களில் மாற்றமடைந்தது.
- பெண்கள் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்றவேண்டியதன் அவசியத்தினை முன்னிலைப்படுத்தி பெண்கள் அரசியல் பங்குபற்றுதலை ஊக்குவிக்கும் நோக்கோடு முன்வைக்கப்பட்ட கருத்தியலே பெண்ணியல் வாதமாகும்.
- கோட்பாடு மற்றும் செயற்பாட்டு சமூககற்கையாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தோற்றம் பெற்ற இந்த கருத்தியல் பின்னர் ஐரோப்பா தவிர்ந்த சமூகங்களிலும் பரவியது.

பெண்ணியவாத இயக்கத்திலும் சிந்தனையிலும் பிரதான 5 கற்றல் துறைகள் இனங்காணலாம்.

1. தாராண்மை பெண்ணியல்வாதம்
2. தீவிர (ரெடிகல்) பெண்ணியல்வாதம்
3. சமவுடமை பெண்ணியல்வாதம்
4. பின் நவீன பெண்ணியல்வாதம்
5. பின் காலணித்துவ பெண்ணியல்வாதம்

### தாராண்மை பெண்ணியல்வாதம்

தாராண்மை பெண்ணியல்வாதம் என்பது கல்வி, தொழில்வாய்ப்பு மற்றும் சமமான ஊதியம் என்பவற்றை பெற்றுக் கொள்வதன் மூலம் பெண்களுக்கான அரசியல் மற்றும் உரிமைகளை பெற்றுக் கொள்ளுதல்.

### தீவிர (ரெடிகல்) பெண்ணியல்வாதம்

தீவிர பெண்ணியல்வாதம் என்பது தந்தை வழி தலைமைத்துவத்தை முற்றாக இல்லாதொழித்தல் பெண்விடுதலைக்கு கட்டாயமானது என ஏற்றுக்கொள்கின்றது. மற்றும் திருமணம், குடும்பம் குழந்தைப்பேறு, கருத்தரித்தல் என்பவற்றை எதிர்த்தல்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### சமவுடமை பெண்ணியல்வாதம்

சமவுடமை பெண்ணியல்வாதம் என்பது வயது, சக்தி, இனம், தேசிய அடிப்படையில் பெண்களை பலவீனப்படுத்துவதை எதிர்த்தல் மற்றும் பெண்களும் தமது உரிமைகளுக்காக பெண்கள் போராட்டத்தை இணைக்கவேண்டும் என்பதில் கவனம் செலுத்துகின்றது.

### பின் நவீன பெண்ணியல்வாதம்

பின்நவீன பெண்ணியல்வாதம் என்பது பெண்கள் மற்றும் பெண்களின் துன்பியல்கள் சமமானதல்ல அவர்கள் துன்பத்தை பல்வேறு விதங்களில் அனுபவிக்கின்றனர். இதனால் பெண்களின் கோரிக்கைகள் ஒரே தன்மையானதாக இருக்க வேண்டியதில்லை என்றும், பெண்கள் வகுப்பு வேறுபாடுகள், நிறபேதங்கள், தொழில் போன்ற காரணிகள் சமமாக இல்லாதிருப்பதனால் அந்த வேறுபாடுகளின் அடிப்படையாகக் கொண்டு பெண்ணியவாதத்தின் தேவை உணர்த்தப்படுகின்றது.

### பின் காலணித்துவ பெண்ணியல்வாதம்

பின் காலணித்தவ பெண்ணியல்வாதம் என்பது காலணித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்ட சமுகங்களில் பெண்களின் துன்பியலுக்கு முக்கியத்துவம் வழங்கி பெண்கள் உரிமைகள் என்ற எண்ணக்கரு மீளுருவாக்கப்பட்டுள்ளது.

அதாவது காலணித்துவ ஆட்சிக்கு உட்பட்ட பெண்களின் அனுபவம் மேற்கத்தேய சமூகங்களில் உள்ள பெண்களின் அனுபவங்களை விட மேலானது. இதனால் அவற்றில் கவனம் செலுத்தி பெண்ணியல்வாத அறிவியலை கட்டியெழுப்ப வேண்டும் என முன்மொழிந்தனர்.

### வினாக்கள்

1. பெண்ணியவாத கருத்தியல்கள் பற்றி ஆராய்க?

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன், ஆசிரியர் - அரசறிவியல், (யா/இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk